குமரன் துணை.

விவேகபாநு.

வால்யூம் 5 } 1906ஆ பிப்பிரவரிமீ { புத்தகம் 2

ஆம்ப்தில் பிரபுவின் அரசாட்சி.

நம் கவர்னராகிய லார்ட் ஆம்ப்தில் இம்மாதம் 14உ புதவாரம் மாலை நம் சென்னையின் அரசாட்சியை விட்டு நீங்கித் தம் சுவதேசம் போகப்பிரயாணமானார். அவர் வந்து அரசாட்சி செய்த ஐந்து வருஷங்களுக்குள் அவர் நமக்குச் செய்த நன்மையைப் பற்றி ஆராய்வாம். அவர் மகாஉத்தமகுணசீலர்., பிரஜைகளிடத்தில் அன்பும், தயையும் உடையவராய் மிக்க அனுதாபம் காட்டி வந்தார். குடிகள் தம்குறைகளையும் இராஜப்பிரதிநிதியிடம் நேரில் சொல்லிக்கொள்ளும்படியான பாக்கியம் இம்மகாப் பிரபுவின் காலத்திலேதான் கிடைத்தது. இவ்வொருவிஷயம் நமக்குஅநுக்கிரகம் செய்ததற்கே நாம் எத்துணையோ நன்றிபாராட்டல்வேண்டும். முதற் சிலகாலம் அவர் உத்தியோகஸ்தர் வசப்பட்டே காரியங்கள் நடத்தி வந்தார். வரவரத்தாமே குடிகளுக்கு க்ஷேமமானவிஷயங்களில் தலையிட்டு அவர்களுக்கு வேண்டிய அனுகூலங்களைத் தம்மாலியன்றவரை செய்துவந்தனர். காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியார் இவ்வுத்தியோகத்துக்குத் தம்மை அனுப்புங்கால் தமக்குச்சொன்ன புத்திகளை அவர் ஒருமுறை வெளியிட்டிருப்பதுமன்றி தாமும் அவ்வாறே நடக்கச்சித்தமாயிருப்பதாகவும்உறுதிகூறிப்பேசினார். இவர்காலத்தில் ஏற்பட்ட சட்டங்கள் கோர்ட் ஆப் வார்ட்ஸ் ஆக்டு, இம்பார்டிபில் எஸ்டேட் ஆக்டு, மதுராஸ் போர்டு டிரஸ்டு ஆக்டு. மதிராஸ் ஸிடி முனிசிபல் ஆக்டு, லாண்ட் என்குரோச்மெண்ட் ஆக்டு, பிளாண்டர்ஸ்

லேயர் ஆக்டு முதலியவைகளே. இவற்றில் கடைசிமூன்றும் ஜனங்களுக்கு அவ்வளவு அனுகூலமுள்ளதென்று சொல்ல வொண்ணாது. முதல் இரண்டு சட்டங்களும் குடிகளுக்கு யாதொரு அனுகூலம் இல்லாவிடினும் ஜமீன்களுக்கு மிக்க க்ஷேமத்தை உண்டு பண்ணிற்று அவ்விதமான சட்டம் ஏற்படாவிட்டால் நம் நாட்டு ஜமீந்தார்கள் சில காலத்துக்குள் தொலைந்து போய்விடுவார்கள். ஜமீன்கள் அதிகமிருப்பதனாலேயே வங்காளத்தார் நம்மினும் நல்ல ஸ்திதியிலிருக்கிறார்கள். ஜமீன்களின் க்ஷேமக்குறைவு உண்டாக உண்டாக நாட்டுக்கும் க்ஷேமக்குறைவே. ஆகையால் இது விஷயத்தில் அவர்கள் செய்த ஏற்பாடு மிகவும் புகழத்தக்கதே. இது நிற்க,

இவர் காலத்தில் விவசாய விஷயத்தில் அதிக கவனஞ் செலுத்தப்பட்டு அநேக நன்மைகள் விளைந்தன. சைதாப்பேட்டை காலேஜை எடுத்துவிட்டுக் கோயமுத்தூரில் விவசாய சாலை ஸ்தாபிக்கப்பட்டது. நொய்யல் ஆற்றுப் பாசனத்தில் விஸ்தாரமான பூமியை ஏற்படுத்தி விவசாய அபிவிருத்தி செய்யத்தக்க ஏற்பாடு செய்தனர். இனி இதன் பயனை நாம் அடையலாம். விவசாய பரீக்ஷை செய்யும் பொருட்டுக் கோவில்பட்டியிலும் பல்லாரியிலும் பாரங்கள் என்ற பண்ணைகள் ஸ்தாபிக்கப்பட்டன. கோவில்பட்டி பண்ணை யாதொரு பயனும் செய்ததாகத் தெரியவில்லை. கரும்புப் பயிருக்குச் சாமல்கோட்டிலும், நிலக்கடலைக்கு பாலூரிலும், மிளகு பயிருக்குத்தளிப்பிரம்பிலும், ஹினட்பூரிலும், பருத்திக்கும் நெல் பயிர்க்கும் ஹாகாரியிலும் பண்ணைகள் ஸ்தாபிக்கப்பட்டன. "நிலத்திற்கணியென்ப நெல்லுங் கரும்பும்" என்ற மூத்தோர் சொல்லை சிரமேற்கொண்டு ஒழுகினது உசிதமே. நீர்ப்பாய்ச்சல் விஷயமாக அபிவிருத்தி செய்ய ஒரு தனி உத்தியோகஸ்தரை அதற்கென்று நியமனஞ் செய்தனர். துங்கபத்திரா, கிருஷ்ணா, காவேரி முதலிய ஆற்றுப் பாய்ச்சல்களை அபிவிருத்திசெய்ய உத்தரவுகள் பிறந்தன. பயிரிடுங் குடிகளுக்கு அனுகூலமான கோ ஆபரேடிவ் ஸொஸைட்டி என்ற ஐக்கிய சங்கங்கள் ஸ்தாபிக்க ஏற்பாடாயின. இதுவரை பல சங்கங்கள் ஏற்பட்டுக் குடிகளுக்கு ஏராளமான நன்மைகள் செய்து வருகின்றன. இம்மாதிரி சங்கங்கள் ஏற்பட்டால்தான் குடிகளுக்கு க்ஷேமம். அநியாய வட்டிக்குச்குக் கடன்கொடுத்து குடியானவர்களுடைய கழுத்துக்

களையும் குடித்தனக்காரருடைய கழுத்துக்களையும் முறிக்கிற பண வியாபாரிகளுடைய கொட்டம் ஒடுங்கி நம்நாடு க்ஷேமமடைய வேண்டுமானால் மேற்கூறிய சங்கங்கள் இன்றியமையாதன.

கைத்தொழில் அபிவிருத்தி விஷயத்திலும் மிஸ்டர் சாட்டர்டன் மூலமாய் சில ஏற்பாடுகள் செய்தனர். சேலத்தில் நெசவுதொழிற்சாலை ஸ்தாபிக்கப்பட்டது. சென்னைப் பொருட்காட்சி சாலைக்குப் பொருளுதவி செய்தனர். கீழோர் கல்வியும் சொற்பம் அபிவிருத்தியடைந்து வர ஆரம்பித்தது. குடியின்கேட்டை விலக்க 14 பிராயத்துக்குட்பட்ட சிறுவருக்குச் சாராயம் விற்கக்கூடாதென்ற ஏற்பாடு செய்தனர். முன் 12 பிராயம் ஏற்பட்டிருந்ததை 14 ஆக்கினது உசிதமே. 18 ஆக்கியிருந்தால் நலமாயிருக்கும். ஏழைகளென்றும் பிரபுக்களென்றும் வித்தியாசம் பாராட்டாமல் எவரிடத்திலும் இவர் பேசிப் பழக ஆவல் கொண்டனர். குடிகளைத் தம்மிடத்தில் வரவழைத்துப் பேசுவதுடன் தாமே குடிகளிருப்பிடங்களுக்குச் சென்று அவர்களுடன் கூடிக் குலாவி வந்தனர். இதனால் இவரது சௌலப்பிய குணம் நன்கு விளங்குகின்றது. பேசும் விஷயத்தில் உள்ளும் புறமும் ஒத்தே விஷயங்களைத் தெரிவிப்பார்.

இவர் நடுவிற் சில மாத காலங்கள் வைஸிராயாகப் போயிருந்தபொழுது அந்த ஸ்தானத்தையும் எவரும் புகழும் வண்ணம் நடாத்திக் காட்டினர். மகாவாக் ஜாலகராகிய கர்ஸன் பிரபுவே இவரது ஆளுகையைப் புகழ்ந்து பேசியிருக்கின்றனர். பொதுவாய் நோக்குங்கால் இவரது ஆளுகை நாட்டுக்கு அநுகூலமாகவே இருந்து வந்தது. இவரது அன்பும், அநுதாபமும், தயாள சிந்தையும், சிநேக வாஞ்சையும், செய்தொழில் ஊக்கமும் எவராலும் பாராட்டற்பாலன. இவரது நற்குணத்தை நாம் எத்துணையும் பாராட்டல் நம் கடனாம். இவர்காலத்தில் சென்னையின் ஒருபாகமாகிய பிளாக்டௌண் என்பது ஜார்ஜ்டௌண் என்று மாறியது முக்கியமானது. இவர் நெடுங்காலம் சௌக்கியத்துடனும் தேகத்திடனுடனுமிருந்து தம் ஜநந பூமியில் வாசஞ்செய்து அங்கு நம் நாட்டுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்துவரும் வண்ணம் பகவான் இப்புண்ணிய புருஷனை ஆசிர்வதிப்பராக.

பத்திராதிபர்.

சுதேசாபிமானம்.

"சுதேசாபிமானம்" என்னும் தொடர்மொழியானது சொந்தத் தேசத்தின் மீது அன்புடைமை எனப்பொருள்படும். தேசம் என்பது பொதுவகையால் தேசத்திலுள்ள பொருள்களை யெல்லா முணர்த்துமேனும் சிறப்புவகையால் அங்குள்ள மக்களையுணர்த்தும்.

சுதேசம்.

ஒருவர் பிறந்த தேசமே அவருக்குச் சுதேசமெனக் கூறலாமெனின் அது பொருந்தாது. என்னை? இங்கிலாந்து சென்றிருக்கும் இந்தியர் ஒருவருக்கு இங்கிலாந்தில் ஒரு புத்திரன் பிறப்பானாயின் அப்புத்திரனுடைய சுதேசம் இங்கிலாந்து எனக் கூறுராகலின். ஒருவருடைய பெற்றோர் பிறந்த தேசமே அவருக்குச் சுதேசமாம் எனக் கூறலாமெனின் அதுவும் பொருந்தாது. என்னை? இங்கிலாந்து வாசியாகிய ஒரு இந்தியருடைய இங்கிலாந்திற் பிறந்த புத்திரன் இங்கிலாந்து வாசியாகிய மற்றொரு இந்தியருடைய இங்கிலாந்திற் பிறந்த புத்திரியை விவாகம் செய்து இங்கிலாந்தில் ஒரு புத்திரனைப் பெறுவாராயின் அப்புத்திரனுடைய சுதேசம் இங்கிலாந்து எனக் கூறுராகலின். இந்தியரிற்பெரும்பாலார் கறுப்புநிறமுள்ளவராயும் ஆங்கிலேயரிற் பெரும்பாலார் வெளுப்பு நிறமுள்ளவராயுமிருப்பது பற்றி வெளுப்பு நிறத்தோர்க்கெல்லாம் சுதேசம் இங்கிலாந்து எனவும் கறுப்பு நிறத்தோர்க்கெல்லாம் சுதேசம் இந்தியா எனவும் கூறலாமெனின் அதுவும் பொருந்தாது. என்னை? இந்தியர் ஒருவர் குடும்ப சகிதம் இங்கிலாந்திற் பல வருஷங்கள் வசிப்பராயின் அவருக்குப் பிறக்கும் புத்திரர் பெரும்பாலும் வெளுப்பு நிறமுள்ளவராயிருப்பர். அப்புத்திரர் மற்றொரு இந்தியருடைய இங்கிலாந்திற் பிறந்த புத்திரியை விவாகஞ் செய்து அங்கேயே வாழ்வராயின் அவருக்குப் பிறக்கும் புத்திரர் ஆங்கிலேயரை யொத்து மிகுந்ததோர் வெளுப்பு நிறமுள்ளவராகவே யிருப்பார். ஒரு தேசத்தார் வெளுப்பு நிறத்தராயும் மற்றொரு தேசத்தார் கறுப்பு நிறத்தராயுமிருப்பது முக்கியமாக அவ்வத்தேசங்களின் சீதோஷ்ண நிலைமையைப் பொறுத்ததேயாம். ஒருவருடைய நடை உடை பாவனைகளைப் பற்றி அவருடைய சுதேசம்

இன்னதெனக் கொள்ளலாமோ வெனின் இந்தியர் ஒருவர் ஆங்கிலே யருடைய நடை, உடை, பாவனைகளையும் ஆங்கிலேயர் ஒருவர் இந்தி யருடைய நடை, உடை, பாவனைகளையும் கைக்கொள்ளக் கூடுமாத லின் அதுவும் பொருந்தாதென்க.

பின்னர் ஒருவருக்குச் சுதேசம் இன்னதெனக் கொள்ளுமாறு தான் யாங்ஙனமெனின் ஒருவருடைய உற்பத்திக்கு அவருக்குத் தெரிந்த வரையிலும் முற்காரணராயிருந்த முப்பாட்டன், முப்பா ட்டி முதலிய முன்னோர் பிறந்த தேசமெதுவோ அதுவே அவருக் குச் சுதேசமெனக்கொள்ளற்பாலதாம். ஒருவருடைய உற்பத்திக் குக் காரணராயிருந்த ஸ்திரீ புருஷர்களில் ஸ்திரீயின் தேசம் எது வோ அதுவே அவருக்குச் சுதேசம் எனச் சிலரும் புருஷர் தேசம் எதுவோ அதுவே அவருக்குச் சுதேசம் எனச் சிலரும் கூறு நிற்பர். அவ்விருவர் கொள்கையும் பொருத்தமுடைத்தேயாம்.

அபிமானம்.

அபிமானம் அன்பு என்பன ஒரே பொருளைக் குறிக்கும் வட மொழி தென்மொழிச் சொற்கள். இனி அன்பு என்பது யாதோ வெனின் அது குடத்தினுள் விளக்குப்போலும் உறையினுள் வாள் போலும் மனத்தின்கண் நிகழும் ஒரு வித நிகழ்ச்சி. 'நிகழ்ச்சி' யென் பது குறைதல் இளகுதல் எனப்பொருள்படும். அன்பின் உண்மை யை அனுபவமாக அறியலாம் அல்லது வெளிப்படுங்காலறியலாம். அதனையனுபவமாயறிதலாவது நாம் நீடித்த நாளாகப்பிரிந்திருக்கும் நம் உற்றார் ஒருவரை பார்க்கவேண்டுமென்று நம்மனத்திலுதிக்கும் பிரியம் நாம் அவர்மீதுகொண்ட அன்பின்வழித்தென்றுணர்தலாம். அதனை வெளிப்படுங்காலறிதலாவது "ஆர்வலர்புன்கணீர்பூசல்தரும்" என்றபடி நமக்குரியார் ஒருவருக்குத் துன்பம் நேரிடுங்கால் நம்மால் தோன்றும் கண்ணீர் முதலிய குறிகளால் அறிதலாம். சுருக்கிச் சொல்லின் அன்பு என்பது தொடர்புடையார் மாட்டுத்துன்பம் கண் டவழி துக்கிக்கவும் சுகம் கண்டவழி சுகிக்கவுங் காரணமாக நிற்கு மோர் அகநிகழ்ச்சியேயாம்.

இயற்கைக் குணம்.

சுதேசாபிமானமில்லாத மாந்தர் உலகினில் ஒருவருமே யிலர். ஒருவருக்குச் சுதேசாபிமானம் உண்டென்றும் மற்றொருவருக்குச்

சுதேசாபிமான மில்லையென்றுங் கூறுதல் அவ்விருவரும் முறையே சுதேசத்தின்மீது கொண்டிருக்கும் அன்பின் மிகுதியையும் குறைவையும் குறித்தேயன்றி வேறன்று. பெற்ற பிள்ளையிடத்து அன்பிலார் உளரெனக் கூறினுங் கூறலாம். பெற்ற அன்னைபால் அன்பிலார் உளரெனக் கூறினுங் கூறலாம். சுதேசத்தின்மீது அன்பிலார் உளரெனக் கூறொணாது. என்னை? ஒருவருடைய சுதேசம் என்பது அவருடையவும் அவருடைய முன்னோருடையவும் பிறப்புக்கும் வளர்ப்புக்கும் மற்றவற்றுக்கும் ஆதாரமாயிருப்பதாதலின் ஒருவர்க்கு நீடித்தநாள் பால் கொடுத்துவந்த ஒரு பசுவின்மீதும் வசிக்குமிடமாயிருந்த ஒரு கட்டிடத்தின்மீதும் அன்பிருப்பது பிரத்தியட்சானுபவம். அங்ஙனமிருந்தும் சுதேசாபிமானம் சிற்சிலரிடம் வெளிப்படக் காணவில்லையேயெனின் அவருக்குமிக நெருங்கியுள்ள சில பொருள்களின்மீதுள்ள அபிமானத்தால் அது உள்ளடங்கிக் கிடக்கின்றது. இதனை ஒரு உதாரண முகத்தால் விளக்குகின்றேன்

மதுரை வாசி ஒருவர் இங்கிலாந்து தேசத்துக்குச்சென்று அங்குப்பலநாள் வசித்திருந்து பின்னர் இந்தியாவுக்கு வருகின்றார். அவர் வருங் கப்பல் இந்தியாவை அணுகுவதற்கு இரண்டு நாள் ஒரு நாளைக்குமுன்னம் அவர் இந்தியாவை நாளைக்கழித்துப்பார்ப்போம் நாளைப் பார்ப்போம் என ஒவ்வொரு நிமிஷமும் அதி ஆவலுடனிருப்பர். இந்தியாக்கரையைத் தூரத்திற்காணவே மிகுதியுஞ் சந்தோஷம் அடைவர். பின்னர் அவர் பம்பாய்த் துறைமுகத்திலிறங்கி ரயிலிற் பிரயாணமாகி வருங்கால் இந்தியாவைப் பார்க்கவேண்டுமென்றிருந்த ஆவல் நீங்கி சென்னை ராஜதானி எல்கையைப்பார்க்கவேண்டுமென்ற ஆவலைக்கொண்டு ஒவ்வொரு நிமிஷமும் அதன்எல்கை அணுகுவதை எதிர்பார்த்திருப்பர். சென்னை ராஜதானியை அடைந்த பின்னர் சென்னை ராஜதானியைப் பார்க்கவேண்டுமென்றிருந்த ஆவல் நீங்கி மதுரை ஜில்லா எல்கை அணுகுவதை ஆவலுடன் பார்த்திருப்பர். மதுரை ஜில்லா எல்கையை அடைந்த பின்னர் அந்த ஆவல் நீங்கி மதுரை நகர் அணுகுவதை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பர். இவ்வித அனுபவம் நம்மில் ஒவ்வொருவருக்கும் பிரத்தியட்சம். இதனால் மானிடராகப்பிறந்த ஒவ்வொருவருக்கும் சுதேசாபிமானம் இயற்கையிலேயே உண்டெனவும் ஆனால் அவ்வபிமானம் அவரவர்க்கு நெருங்

மெமற்றொரு பொருளின்மீதுள்ள அபிமானத்தால் வெளிப்பட்டு விளங்குவதில்லை யெனவும் தெரிகின்றது.

வெளிப்படுத்தும் சமயம்.

சுதேசாபிமானம் ஒவ்வொருவருடையமனத்திலும் உண்டென்பது உண்மையாயினும் சமயம் வாய்ந்துழி அதனை வெளிப்படுத்தி அதற்குரிய செயல்களைச்செய்யவேண்டும். அன்றேல் சுதேசாபிமானத்தால் யாரொருவருக்கும் யாதாமொருபயனுமிலதாம். சுதேசாபிமானத்தை உபயோகப்படுத்தவேண்டுவது சுதேசத்தாருக்கு அன்னமின்மை, ஆடையின்மை, நோய் முதலிய இடுக்கண்கள் நேர்ந்தபோதும் தெய்வசிந்தனை, கல்வியறிவு, செல்வச்சிறப்பு முதலியன குன்றியபோதும், சுதேசத்தாருக்கு சுயார்ச்சிதம் இழக்கவும், அடிமைத்தனம்பெறவும் நேர்ந்தபோதுமேயாம். ஒருவர் பிறப்பதற்கு ஆதாரமாயிருந்தவள் அவருக்குத் தாயென்றால் அவரும் அவருடைய முன்னோரும் பிறப்பதற்கு ஆதாரமாயிருந்த தேசம் அவரைப்பெற்றதாயினும் மேலென்பதற்குத் தடை யென்னை? ஆகவே சுதேசத்தாருக்கு நேர்ந்தவறுமை, துன்பம், அடிமைத்தனம் முதலியவற்றை ஒவ்வொருவரும்அவரவரைப்பெற்ற தாய்க்கேவந்ததாகக் கொள்ளவேண்டும். பெற்றதாய் உண்ண அன்னமில்லாமலும் உடுக்க வஸ்திரமில்லாமலும் அன்னியருக்கு அடிமைப்பட்டும் வருந்தப்பார்த்து மனஞ்சகித்திருக்கும் புத்திரனும் உலகின்கண் உண்டோ? சுதேசத்தார் சுதேசத்தாயின் பல அவயவங்களேயாவர். அவளுடைய சில அவயவங்களுக்கு நேர்ந்த திங்குகள் நாளடைவில் அவளுடைய மற்ற அவயவங்களாகிய மற்றவரையுந் தொடர்ந்து மற்றவரும் வருந்த நேரிடுமென்பதை நினைந்து வெள்ளம் வருமுன்னர் அணைகட்டிக்கொள்வது அறிவிற்சிறந்த மாந்தரது கடமையாம். அன்றிச் சுதேசம் பூராவும் வறுமைவாய் அல்லது அடிமைவாய்ப்பட நேருமானல் பின்னர் அதனை மீட்கவே வழியிராதாதலின் சமயம் கண்டுழி ஒவ்வொருவரும் அவரவர் சுதேசாபிமானத்தை வெளிப்படுத்தல்வேண்டும்.

வெளிப்படுத்தும் மார்க்கம்.

சுதேசத்தார்க்கு அன்னமின்மை, ஆடையின்மை, சுகமின்மை முதலியவறுமை நேருங்கால் சுதேசாபிமானமுள்ள ஒவ்வொருவரும்

அவரவராலியன்றவரை அன்னம், ஆடை மருந்து முதலியவற்றை யுதவி அவ்வறுமைகளை நிவிர்த்திப்பதுடன் சுதேசத்தார் அவ்வறுமைகளைப் பின்னரும் அடையாது வாழும்படிக்கான செயல்களைத் தேர்ந்து செய்யவும் வேண்டும். சுதேசத்தில் கடவுள் ஞானம், கல்வியறிவு, பொருளுடைமை முதலிய குறைந்தபோது ஒவ்வொருவரும் அவரவராலியன்றவரை கடவுள் ஞானம், கல்வியறிவு, பொருள் முதலியவற்றைச் சுதேசத்தார்க்கு அளிக்கவேண்டும். பலர்கூடி அன்னசாலை, ஆடைசாலை, வைத்தியசாலை, ஞானசபை, பள்ளிக்கூடம், கைத்தொழிற்சாலை முதலியன ஏற்படுத்திச் சுதேசவறுமைகளைப் பின்னர் வராது நீக்கவும்வேண்டும். ஆனல் சுதேசத்தார் சுயார்ச்சிதம் இழந்து அன்னியர்க்கு அடிமைப்பட நேருமானல் அவ்வடிமைத்தனத்தினின்றும் அவரை நீக்கிச் சுயார்ச்சிதம் பெறுதற்குச் சுதேசத்தாரெல்லாரும் ஒன்றுகூடி ஒற்றுமையுடன் வேலைசெய்யவேண்டும். வறுமையினும் வியாதியினும் சகிக்கொணுக்கொடியது அடிமைத்தனமே. என்னை ? ஒருவர் மற்றொருவர்க்கு அடிமையாக விருப்பின் அவர் மற்றவர்க்கு அடிமைத்தொழில் செய்வதையன்றி அவர் தம் சொந்த வறுமையாதிகளை நீக்கிக்கொள்ளுஞ் செயல்களைச் செய்ய வலியில்லாராக வருந்துவராதலின் சுதேசாபிமானச் செயல்களெல்லாவற்றினும் மேம்பட்டதும் முக்கியமானதும் அவசியமாகச்செய்யவேண்டுவதும் சுதேசத்தார் அடிமைத்தனத்திலிருப்பின் அதனின்றும் அவரைக்கரையேற்றுதலேயாம். அடிமை என்ற பெயர் அவருக்கிருப்பதும் இல்லாததும் பொருட்டல்ல. அடிமைக்கொப்பந்தம் ஒவ்வொருவரும் அவரவர்க்கு நன்மையையுஞ் சுகத்தையுங் கொடுக்குஞ் செயல்களை அவரவர் சுயார்ச்சிதமாகச் செய்துகொள்ள வியலாத நிலையிலிருப்பதே அடிமைத்தனமாம்.

சுதேசத்தார் ஒன்று சேர்வதற்கும் ஒற்றுமையாகவிருப்பதற்கும் முக்கிய தடைகள் ஜாதியபிமானம் மதாபிமானங்களே. உலகத்தில் தாழ்ந்த நிலைமையையடைந்த ஒவ்வொரு தேசத்தின் சரித்திரத்தையும் கவனிப்போமாயின் சுதேசத்தாருக்குள் ஜாதிபேதம் மதபேதம் ஏற்பட்டுச் சுதேச ஒற்றுமையையும் பேதப்படுத்தி சுதேச நிலைமையையும் பேதப்படுத்தினதாகத் தெரியவரும். சுதேசத்தாரெல்லோர்க்கும் பொதுவாயதோர் நன்மையைப் பயக்கும் செயல்

களைச் செய்யவேண்டுங்கால் சுதேசத்தார் ஒவ்வொருவரும் அவரவர்க்குள் நிகழா நிற்கும் சொந்த வேற்றுமைகளைப்பாராட்டல் கூடாது. மேலும் ஜாதி என்பது தொழில் பற்றியே ஏற்படுத்தப்பட்டதென நூல்களெல்லாம் கூறுகின்றன. ஒவ்வொரு ஜாதிப் பெயரின்பொருளை உற்று நோக்குவோமாயின் ஜாதிகளெல்லாம் தொழில் பற்றியே உண்டானவை யென்பது நன்கு விளங்கும். இனி ஒவ்வொரு மதமும் ஒவ்வொருகாலத்தில் தோன்றிய ஒவ்வொரு பெரியவருடைய அறிவு விளக்கமேயன்றி வேறன்று. ஒருவர் அறிவுக்கு மற்றொருவர் அறிவு எல்லாவிஷயங்களிலும் பொருத்தமுடையதாக விருக்குமா? சில விஷயங்களிற் பொருத்தமின்றித் தானேயிருக்கக்கூடும். அதுபற்றிச் சுதேசத்தாருக்குள் சகோதரவாஞ்சையைக்குறைப்பது நியாயமாகுமா? சுதேசத்தின்நன்மையைக்கருதும் ஒவ்வொருவரும் அவரவர்ஜாதி மதாபிமானங்களை அவரவர் சொந்தவிஷயங்களில் மாத்திரம் கவனித்துக்கொண்டு சுதேசப்பொதுவிஷயங்களிற் பாராட்டாது பலருமொன்றுகூடி ஒரேமனத்துடன் சுதேச அடிமைத்தனத்தை நீக்கி சுயார்ச்சிதம்பெற வுழைக்கவேண்டும். சுதேசநன்மைக்காக ஒவ்வொருவரும் சமயம் வாய்ந்துழி அவரவர் உடல்பொருள் ஆவிகளைத் தத்தம்பண்ணவும் தயாராயிருக்கவேண்டும்.

அடையும் பயன்.

சுதேசம் சுகமாக வாழ நாமும் சுகமாக வாழ்வோம். மேலும் அன்னமில்லாமல் இறந்து படும் அல்லது வருந்தும் சுதேசத்தவருக்கு அன்னம் கிடைக்கும்படிசெய்து அவர்களை மரணத்தின் அல்லது பசிவாயினின்று நிவிர்த்திப்போமாயின்.

"ஆற்றுவா ராற்றல் பசியாற்ற லப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின்."

என்ற முதுமொழிப்படி தவத்தினது வலிக்கு மேற்பட்ட வலியை யெல்லாம் பெறுவோம், தவத்தின்வலியோ

"வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப் படும்."

என்றபடி தவத்தினர் எதனையெல்லாம் அடையவேண்டுமென்று நினைப்பரோ அதனை யெல்லாம் அந்த நிமிஷமே அடையும்படிசெ

யயும். பிறர்பகியை மாற்றுதல் அத்தவத்திற்கு மேற்பட்ட வலியைத் தருமென்றால் அதனால் நாம் அடையும் பயன்கள் இன்னவெனக்கூறவும் வேண்டுமோ? இன்னும்; அன்புடையவர்

“அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்றா ரெய்துஞ் சிறப்பு.”

என்றபடி அறம் பொருள் இன்பம் மூன்றையும் அடைந்து வீட்டையும் அடைவர் என்னின் சுதேச அன்பையுடையவர் அடையும் பயன்களை யாவர் தாம் எடுத்துக்கூற வல்லராவர்? சுதேசத்தின் வறுமையை நீக்குவதென்னில் நம்முடைய வறுமையையும் நம்முடைய பின்னோர் வறுமையையும் நீக்கியவாறேயாம். வறுமையின் கொடுமையோ,

“இன்மையி னின்னாத தியாதெனி னின்மையி
னின்மையே யின்னா தது.”
“இன்மை யெனவொரு பாவி மறுமையு
மிம்மையு மின்றி வரும்.”
“நெருப்பினுட் டுஞ்சலு மாகு நிரப்பினுள்
யாதொன்றுங் கண்பா டரிது.”

என்று கூறப்பட்டுள்ளபடியால் சுதேசத்தின் வறுமையை நீக்குவதால் எத்தனையோ பேர்களுடைய இம்மை மறுமைத் துன்பங்களை எல்லாம் நீக்கி அவர்களுக்கு இம்மை மறுமைச் சுகங்களைக்கொடுக்கிறவராகின்றோம். சாதாரணமானதொருபொருளை ஒருவர்க்களிப்பதால் இம்மையிற் புகழும் மறுமையிற் சுவர்க்க வின்பமும் முடிவில் முத்தியின்பமும் கிடைக்குமென ஆன்றோர் பலருங் கூறியுள்ளார். ஆகச்சே இம்மையின்பங்களையும் மறுமையின்பங்களையும் சுசேதத்தாரெல்லோர்க்குங் கொடுப்பவர் இம்மைப்புகழையும் மறுமைச் சுவர்க்கவின்பத்தையும் பெற்று முடிவில் முத்திப்பேற்றையும் பெறுவரென்பது சத்தியமாதலால் மானிடராய்ப்பிறந்த ஒவ்வொருவரும் அவரவர் சுதேசத்திற்கு வறுமையாதிய நேர்ந்தபொழுது அவரவர் தாய்க்கும் அவரவர்க்கும் நேர்ந்ததாகக்கொண்டு அவற்றை நீக்குதற்குரிய செயல்களை யெல்லாம் ஒன்றுகூடி ஒற்றுமையுடன் செய்வாரெனப் பிரார்த்திக்கிறேன்.

வ. உ. சிதம்பரம்பிள்ளை.

சிந்தாமணி சரித்திரம்.

[21-ம் பக்கத் தொடர்ச்சி]

அவ்வசனத்தைக் கேட்டுச் சிந்தாமணி கொஞ்சம் தைரியமடைந்து அன்று முழுதும் கிருஷ்ணருடைய வீட்டில் இருந்தனள். முன் சொல்லியபடி மறுநாள் காலையில் கிருஷ்ணையரும் மகாதேவையரும் சிந்தாமணியையும் அவளுக்குச்சகாயமாகக் கிருஷ்ணைய வீட்டுச் சாமொலி அழகி என்பவளையும் கூட அழைத்துக்கொண்டு திருவனந்தபுரத்துக்குப்பிரயாணமாகிக் கொல்லம் துறைமுகம் வந்துசேர்ந்தார்கள். அந்தத் துறைமுகத்தில் பல படவுகள் புறப்படுவதற்குச் சன்னத்தமாயிருந்தன. படகேறிப்பிரயாணமாவதற்கு அநேக ஜனங்கள் காத்துக்கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் சற்றேறக்குறைய இருபத்தைந்து வயதுள்ள வாலிபப்பருவமுடையவர். மிகக் கறுத்த மேனியும் குரூரமான பார்வையுமுடையவராக மிகுந்த செல்வாக்குடன் அத்துறை முகத்தில் எல்லாராலும் வணங்கப்பெற்று அங்குமிங்கும் உலாவிக்கொண்டிருந்தார். அவர் விலையுயர்ந்த உடுப்புக்களையும் ஆபரணங்களையும் அணிந்துகொண்டு தன்னுடைய அழகையும் செல்வத்தையும் அங்குள்ள அனைவரும் பார்த்து மகிழவேணுமென்று விரும்பினவர்போலத் துறைமுகத்தில் ஓரிடத்திலிராமல் எங்கும் அதிகாரம் செய்துகொண்டு நின்றார். அவருடன் பயங்கரமான ரூபமுள்ள ஏழெட்டு நாய்களும் இரக்கம், கருணை என்பது திவலை யேனும் இல்லாது எந்தக்கொலைத்தொழிலுக்கும் தகுதியானவர்களென்று ஐயமற விளம்புகிற முகக்காட்சியையுடைய பத்துப் பதினைந்து கிங்கரர்களும் கூடி உலாவிக்கொண்டிருந்தார்கள். அச்சமயத்தில் சிந்தாமணியும் அழகியும் ஒதுக்கமான ஓர் இடத்தில் அவர்களுடைய மூட்டைகளுடன் உட்காந்துகொண்டிருந்தார்கள். அப்பொழுது கிருஷ்ணையர் மகாதேவையரை நோக்கி:—

“ மகாதேவா ! இவர்யாரப்பா மிருத்யுஸ்வரூபமாக இருக்கிறாரே. இவர் எந்த ஊர் ஜமீந்தார் இத்தனை நாய்களைக் கட்டிக்கொண்டு இவரென்ன செய்யப்போகிறாரோ தெரியவில்லையே பெரும்பாலும் ஜமீந்தார்களுடைய சுபாவமே நிரம்ப மனோகரமானது. அது போதாதென்று நினைத்தோ அவர்கள் இருக்கும் இடமெல்லாம் துப்பாக்கிகளும் நாய்களுமாய் நிறைந்திருக்கின்றன. இன்ன பிராணிகளைத்தான் வேட்டையாடுகிறதென்கிற நியமம் அவர்களுக்கில்லை. இவர் யாரப்பா என்று சொன்னான். அதுகேட்டு மகாதேவன் “ இவர் சமீபத்திலுள்ள ———— ஊர்ஜமீந்தார். இதுவரை இவர் கோர்ட் ஆப் வார்ட்ஸ் சம்ரட்சணையிலிருந்து இப்பொழுதுதான்

சுதந்தரமாக ஜமீனையாளத் தொடங்கி யிருக்கிறார். இது கண்ணுக்குத் தலை தெரியாத சமயம். கோர்ட்டு ஆப் வார்ட்ஸில் இவர்களுக்கு என்ன அற்புதமான வித்தியாப்பியாசம் கிடைக்கிறதோ தெரியவில்லை. அந்த வித்தைக்கடையாளம் மோசஸ் அண் கோ உடுப்புகளும் பி. ஆர். அண் ஸன்ஸ் கம்பெனியின் வைர நகைகளும் நாட்டுச் சரக்கில் அருவருப்புக் கொண்டு சீமைச் சரக்கிலேயே எப்பொழுதும் மூழ்கிக்கொண்டிருப்பதும் தவிர வேறொன்றும் நமக்குப் புலப்படவில்லை. உயர்ந்த ஜீவகாருண்யமும் அன்பும் கோர்ட் ஆவ் வார்ட்ஸில்தான் இவர்களுக்குப் பழக்கப்படுகின்றன போலும். இந்த மகானுபாவர்களுக்கு மனுஷ தேகத்துக்கும் வெள்ளரிப் பிஞ்சுக்கும் வித்தியாசமில்லை. அவருக்கும் எனக்கும் சொற்பப் பழக்கம் உண்டு. அடா! அவர் நம்மை நோக்கித்தான் வருகிறார்" என்று சொல்லிக்கொண்டிருக்கையில் அந்த ஜமீந்தார் மகாதேவையருக்கு சமீபமாக வந்து

"எங்கே ஐயரே! திருவனந்தபுரத்துக்கா" என்று கேட்டுவிட்டுப் பக்கத்திலிருந்த சிந்தாமணியைப் பார்த்து 'இந்த அம்மாள் யார் ஐயா!' என்று கேட்டார். மகாதேவையர் "நடராஜ செட்டியாரை அவ்விடத்துக்கு நன்றாய்த் தெரியுமே. திருவனந்தபுரம் சாலைத்தெருவில் பெரிய மாடி வீட்டில் வாசஞ்செய்துகொண்டிருக்கிறார் அல்லவா. இந்த அம்மாள் அவருடைய மனைவி. அவள் அவரிடத்துக்குப் போகவேண்டுமென்று வந்திருக்கிறாள். நடராஜசெட்டியார் எனக்குப் பிரியமுள்ள நண்பர் ஆகையால் நானும் இந்தக் கிருஷ்ணையரும் அந்த அம்மாளுக்குத் துணையாக வருகின்றோம்" என்று சொன்னார். உடனே அந்த ஜமீந்தார் தன்னுடையவேலைக்காரர்களைக்கொண்டு நல்லதாக ஒரு படகை அமர்த்தி அதில் சிந்தாமணியையும் அழகியையும் தன்னுடன் வந்திருந்த சில வேலைக்காரிகளையும் ஏறும்படி செய்வித்து மற்றொருபடகில் கிருஷ்ணையரும் மகாதேவையரும் சௌகரியமாக இருக்கும்படி செய்தார். தான் தன்னுடைய சில வேலைக்காரர்களுடன் அஸ்மானகிரியினால் அலங்கரிக்கப்பட்ட வேறொருபடகில் ஏறினார். படகுகளை நடத்துகிறவர்களை அவர் தனித்தனியாக அழைத்துச் சில உத்தரவுகளும் செய்தார். அந்தப்படகுகள் ஒன்றன்பின் ஒன்றாகப் புறப்பட்டுத் திருவனந்தபுரம் நோக்கி சடுதியிற் சென்றன. ஜமீன்தார் இருந்த படகும் சிந்தாமணி இருந்த படகும் தொடர்ந்து முன்னாகச் செல்ல என்ன காரணத்தினாலோ மற்றப்படகுகள் பின்னடைந்து மெதுவாக வந்தன. சொற்ப தூரம் சென்ற பிறகு கிருஷ்ணையரும் மாகாதேவையரும் ஏறிவரும் படகு வெகு தூரம் பின்னடைந்துவிட்டபடியால் அது சிந்தாமணியின் கண்ணுக்குத் தோற்றவில்லை. அப்பொழுது சூரியன் அஸ்தமயமாகி மூன்று நாழிகையாயிற்று. இருட்டு மிகுதியாய் இருந்தபடியால் ஒருவர் பார்வை

க்கு மற்றொருவர் புலப்படவில்லை. இத்தருணத்தில் ஜமீந்தார் இருந்த படகும் ஒரு துறைமுகத்தில் வந்து நின்றன. ஜமீந்தாரும் அவருடைய வேலைக்காரர்களும் படகுவிட்டிறங்கினவுடன் அவர் சிந்தாமணியின் படகுக்கருகில் வந்து அவளை நோக்கி

“அம்மா! இங்குத்தான் இறங்கவேண்டியது. வண்டிகள் சன்னத்தமாயிருக்கின்றன. நாம் விடுதிக்குப்போனால் மகாதேவையரும் அவருடைய சிநேகிதரும் சீக்கிரமாக அங்கு வந்துவிடுவார்கள். அவருடைய படகும் இதோ வந்துவிட்டது.” என்று சொன்னார். உடனே சிந்தாமணியும் ஜமீந்தாருடைய வேலைக்காரிகளும் படகைவிட்டு இறங்கினார்கள். அழகி இறங்குவதற்குமுன் படகை நடத்துகிறவன் அதை நிறுத்தாமல் முன்னும் பின்னுமாக நடத்துகிறவன் போல் பாவனை செய்து அவளை அதில் வைத்துக்கொண்டு வெகுதூரம் போய்விட்டான் சிந்தாமணி இறங்கின உடன்:—

அழகி எங்கே என்று அவள் கேட்க அவள் மற்றொரு வண்டியில் ஏறிவிட்டாளென்று ஜமீந்தார் சொல்லிவிட்டார். பிறகு சிந்தாமணியும் ஜமீந்தாருடைய சிலவேலைக்காரிகளும் ஒருவண்டியில் ஏறிக்கொண்டு அவருடைய வண்டியை அனுசரித்துச் சென்றனர். அவ்வண்டிகள் நெருங்கிய சோலை நிறைந்த ஒரு ஊருக்குட்சென்றன. சிந்தாமணியின் வண்டியானது ஒரு பூஞ்சோலையின் வாசலில்போய் நின்றது. அவளை வேலைக்காரிகள் அப்பூஞ்சோலைக்குள் அழைத்துப்போய் அங்குள்ள ஒரு மனோகரமான சிறுமாளிகையில் இருக்கும்படி செய்தார்கள். ஜமீந்தார் ஒருவேலைக்காரியிடத்தில் ஏதோ சில வசனங்களை இரகசியமாக மொழிந்துவிட்டு பக்கத்திலுள்ள தன்னுடைய விடுதிக்குச்சென்றார். மேலே சொல்லிய ஒரு வேலைக்காரி தவிர மற்றவேலைக்காரிகளும் தங்கள் விடுதிக்குப்போய்விட்டார்கள். அந்த வேலைக்காரியும் சிந்தாமணியும் மட்டுந்தான் அந்தப் பூஞ்சோலை மாளிகையிலிருந்தார்கள். சிந்தாமணி மிகுந்த புத்திசாலி ஆகையால் மகாதேவையரும் கிருஷ்ணையரும் ஏறிவந்த படகு பின்னடைந்ததையும் வேறு ஒரு வண்டியில் வருவதாகச்சொன்ன அழகி வாராமலிருப்பதையும் எண்ணியெண்ணி ஏதோகொடியவிபத்து சம்பவித்திருக்கிறதென்று தீர்மானித்து அதிகமான மனோவியாகுலத்துடன் தன் அருகிலிருந்த வேலைக்காரியும் வரக்காணோம், எனக்குத்துணையாகவந்த இரண்டுபிராமணர்களுடைய படகும் பிந்திவிட்டது. அம்மா! நான் என்ன செய்வேன் இந்த ஜமீந்தாருடைய சுபாவம் எத்தன்மையுடையதோ எப்படியிருந்தாலும் அவர் அந்நியஸ்தர்: நீ தயவு செய்து என்னை இப்பூஞ்சோலைக்கு வெளியில் போகும்படி விடைகொடுத்தால் எங்கேயாவதுபோய் என்மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளுகிறேனென்று சொன்னாள். அதுகேட்டு அந்தவேலைக்காரி அம்மா ! வேலைக்கா

ரர்கள் கேட்டுக்கதவை பூட்டிக்கொண்டு போய்விட்டார்கள் என்று சொல்லிவிட்டுப் பிறகு ஒன்றும் வசனியாமலும் சிந்தாமணியின் கேள்வி ஒன்றுக்கும் மறுமொழி உரைக்காமலும் மௌனமாயிருந்தாள். சற்றுநேரம் சென்றவுடன் ஒரு வேலைக்காரி சிந்தாமணி புஜிப்பதற்காக அன்னம் முதலியவற்றை அவள் முன்னர் கொண்டுவந்து வைத்தாள். அத்தருணத்தில் அது அவளுக்கு விஷமாகத்தோன்றினமையால் சிந்தாமணி அதைப்புசிக்கவில்லை. அந்த மாளிகையின் ஒரு பக்கத்தில் வெகு சிங்காரமுள்ள கூடங்களும், நாற்காலிகள் கட்டில் மெத்தை முதலிய விலையுயர்ந்த வஸ்துக்களும் நிரம்பியிருந்தன. சிந்தாமணி தன்னுடைய நிர்ப்பந்தமான நிலைமையை நினைத்துச் சங்கடப்பட்டுக்கொண்டிருக்கையில் கேட்டில் சங்கீதமான ஒரு தொனியானது கேட்கப்பட்டது. உடனே அங்கிருந்து இரண்டு வேலைக்காரிகளும் கேட்டை நோக்கிப் போகவும் ஜமீந்தார் தனிமையாகப் பரபரப்புடன் சிந்தாமணியிருக்கும் இடத்திற்கு வந்தார். அவரைப்பார்த்தவுடன் சிந்தாமணி நடந்திருப்பது அனைத்தும் முழுமோசமென்று தன்னுடைய புத்தியினால் செவ்வையாய் அறிந்துகொண்டு மிகுந்த பயத்துடன் ஈசுவரனைத் தியானித்து " கிருபா நிதியே ! கடைசியில் இக்கோலமா நீர் எனக்கமைத்தது ? ஐயோ ! இந்தக்கொடும்பாவி என் ஜன்மத்தைப் பாழாக்க அல்லவோ நினைத்து வருகின்றான். நான் தப்பிப் பிழைப்பதற்கு ஒரு முறையும் இல்லையே நிச்சயமாக அந்தப்புண்ணியவான்களும் அழுகியும் கடலில் மூழ்கியே இருப்பார்கள். ஒருதுணையுமற்ற எனக்கு நீரன்றி யார் துணை. " என்றுதன் வாய்க்குள் ஜபித்துக்கொண்டு ஒரு பக்கத்தில் நின்றுகொண்டிருந்தாள். அங்கு வந்த ஜமீந்தார் அளவுக்குமேல் அருந்திய சீமைச்சரக்கின் வெறியினால் தள்ளாட்டத்துடன் சிந்தாமணியை வந்து பார்த்து மையல் தலைக்கேறி பலாத்காரமாக அவளை அணையவேண்டுமென்கிற கருத்துடன் தடபுடலாகத்தான் அணிந்திருந்த உடுப்புக்களைக் கழற்றித் தன் காலின் கீழாகத் தரையின் மீது தொப்பென்று போட்டார். அந்த உடுப்பினுடைய ஓர் பக்கம் பையில் வெடி மருந்து வைத்துக் கெட்டித்த ஒரு ரிவால்வர் இருந்தபடியால் அது தரையில் அடிபட்டவுடன் வெடித்து அதிலிருந்த ரவையானது ஜமீந்தாருடைய கழுத்தினூடாகச் செல்லவும் ஐயோ என்று அலறிக்கொண்டு அவர் கீழேவிழுந்து மூர்ச்சையானார். வெடியின் சத்தங்கேட்ட வேலைக்காரிகள் இருவரும் அங்கு ஓடிவந்து கீழே விழுந்து கிடக்கும் ரிவால்வரையும் மூர்ச்சையாக விழுந்துவிட்ட ஜமீந்தாரையும் பார்த்துப் பயங்கொண்டு அவருடைய விடுதியைப் பார்க்க ஓடினார்கள். இதைப்பார்த்த சிந்தாமணி " ஐயோ ! நான் இனி என்ன செய்யத்தக்கது. இவர் கொடிதான பாவத்தைச் செய்வதற்குத் துணிந்தபோதிலும் இவ்வளவு பரிதாபமாக இந்தத்துர்க்கதியை யடையவேண்டுமோ ? ஈசா ! என்னைக்காப்பாற்றமட்டும் உன்னை

பிரார்த்தித்தேனே தவிர என் கண் முன்னர் இந்தக் கொடிய விதியை அவர் அனுபவிக்கவேண்டுமென்று பிரார்த்தனை செய்தேன்" என்று சொல்லி அந்த ஜமீந்தாரைப் பார்த்து மிகுந்த இரக்கத்துடன்

"இவருக்கு ஈசுவரன் உயிர்ப்பிச்சை கருணையுடன் அளிக்கவேண்டுமென்று கூறிவிட்டு அங்கு நில்லாமல் பூஞ்சோலைக்கு வெளியே வந்து அங்கு ஒருவரும் இல்லாதபடியால் அதற்கு நேராகப்போகின்ற ஓர் தெருவில் புகுந்து தப்பிச் சென்றுவிட்டாள்.

(இன்னும் வரும்)

உமாதாஸ்.

அன்னையும் பிதாவும்.

(16 பக்கம் தொடர்ச்சி.)

வேண்டிக்கொண்டு தன் புத்திரனை வியர்த்து முத்தமிட்டு நன்றி பாராட்டினன். அன்றுதொட்டுத் தன் தந்தைபால் தேவ விசுவாசத்துடன் நடந்தான். எனக்கூறுவதுண்டு. "தந்தை எப்படி மைந்தன் அப்படி" என்னும் பழமொழிக்கிணங்க நாம் நமது தாய்தந்தை முதலானரிடம் எவ்வளவு அன்பு பாராட்டுகின்றோமோ அவ்வளவும் நம்மிடம் நம்மக்கள் அன்புபாராட்டி நடக்கும்படி தூண்டி வற்புறுத்தியதாகும். இது இம்மையிற் கைகண்டபலன் அன்றோ? மறுமைப்பலன் வேறு பெரிதாகவிருக்கிறது. இப்படியெல்லாமிருந்தும் நம்மவருட்பல்லோர் மாதாபிதாக்களைப் படுத்தும்பாடு சகிக்கொண்ணாது. சிலர் மாதாபிதாகட்கு அற்பவுணவுகொடுத்து அவரெதிரேதாம் நல்லுணவுண்கின்றார், இவர் எய்துங்கதிதான்யாதோ! தாய்தந்தையர்களிடத்து அன்பில்லாதவர் யாரோ அவர் தமக்கும் அன்பில்லார் பிறர்க்கும் அன்பில்லார். புவிக்குப் பெருஞ்சுமையானவர் அவரே. இப்படிப்பட்டவரைப் பார்த்தாலும், அவருடன் பேசினாலும், பழகினாலும், உண்டாலும், உறவுகொண்டாலும் வருவது பழியும் பாவமுமின்றிப் பிறிதொன்றில்லை.

"ஈன்று வளர்த்த தாய்தந்தைக் கெவரே கைம்மா றியற்றிடுவார்
ஆன்ற மதலை நூறுவய தளவும் அடிமைத் திறம்பூண்டு
மூன்று புவனத் துள்ளபொருள் முற்றும் அளித்து முறைமுறையே
என்று வழிபா டியற்றிடினும் ஒருநாள் வளர்த்தற் கிணையாதே."

என்னும், அருமைப்பாடல் நன்கு சவனித்துணரற்பாற்று.

சுபம்.

ஆலயந்தொழுவது.

"ஆலயந்தொழுவது சாலவு நன்று" என்பதற்கு தேவாலயத்தை வணங்குவது மிகவுநல்லது. என்பதுபொருள். இனி ஆலயம் என்பது யாது? அது எதன்பொருட்டு எவ்வாறு அமைக்கப்பெறுவது? ஏன் அதைத்தொழவேண்டும்? அதனால் எய்தும் பயன் என்? என்பனவாதிய பல வேறுவிஷயங்களை ஆராய்தல் இவ்விடத்து ஏற்றதாகும்.

ஆலயம், அண்டாலயம், பிண்டாலயம், மானதாலயம், பிரதிட்டாலயம் என நான்கு வகைப்படும். இவற்றுள் இங்கே கூறவந்தது பிரதிட்டாலயத்தையேயாம் அறிவின் ஆரம்பகாலத்திலேயே போதிக்கவந்த நூலாதலினென்க. பிரதிட்டாலயம் என்பது திருமதில், கோபுரம், பலிபீடம், துஜஸ்தம்பம், மூர்த்திகள் முதலாக அமைக்கப்பெற்று பற்பல ஸ்தலங்களிலும் கண்கூடாக விளங்குவனவேயாம். மேற்சொல்லிய ஒவ்வொன்றும் இன்னபடியிருக்கவேண்டுமென்று ஆகமாதி நூல்கள் விரித்துக்கூறும். இத்தகைய ஆலயங்களையும் மூர்த்திகளையும் வணங்கவேண்டிய முறையும் பலவேறு வகைப்படும். மதத்துக்கும் காலத்துக்கும் இடத்துக்கும் தக்கபடி முன்னமே நமது பெரியோர்களால் இவ்வரையறையனைத்தும் சாஸ்திரவாயிலாகவும் வழக்கமுறையாகவும் ஏற்படுத்தப்பெற்றுள்ளன. இந்த ஏற்பாட்டின்படி ஆலயத்துட்சென்று கடவுளை வணங்கிவருதல் நம்மில்யாவரும்

அறிந்ததே. தற்காலத்தில் கடவுள் வணக்கத்துக்கு ஆலயம்வேண்டுவதா? எங்கும் நிறைந்து சுட்டமுடியாப்பரம்பொருளாகி விளங்கும் கடவுளை ஓர் ஆலயத்தில் இருப்பித்து வணக்கமுதலிய செய்தல் அவசியமா? என்பன ஆதியசங்கைகள் சிலரால் வெளிப்படுகின்றன. பாசத்தால் பந்திக்கப்பட்ட ஆன்மாவானது முற்றுணர்ச்சியில்லாமலும் அறிந்ததையும் மறக்கும் சுபாவமுடையதாயும் மனம் ஒருவழிப்படப்பெறாததாயும் இருத்தலால் இந்த ஆன்மாவினது அறிவின் தகுதிக்கு எதையும் ஓர் நியதிப்படுத்தாவிடில் அதன்நிலை ஸ்திரப்படாமல் மறப்பெனுங்கடலில் விழ்ந்து கெட்டேபோகும். ஆதலின் கடவுள் வழிபாடு எப்போதும்செய்து ஏகாக்கிர சித்தமுற்றுச் சலனமற்ற நிலையையடைந்து அதனால் மோக்ஷமடையும்படி யிருக்கிற ஆன்மவுணர்ச்சிக்கேற்பவே கோயிலையமைத்துக் கோபுரங்கட்டிக் கடவுளை யெழுந்தருளச்செய்து வாத்திய முதலிய முழக்கத்தாலும் தீபாலங்கார முதலிய ஒளியாலும் செவியறிவும் கண்ணறிவும் அடுத்தடுத்து அவைகளிற் செல்லும்படியாகவும் அப்படிச்செல்லும் போதெல்லாங் கடவுள் சிந்தனை மேலிடும்படியாகவும் அமைத்துவைத்த நமது முன்னோர் மதிவலிமை மிகப்பாராட்டற்பாலதே. தொன்றுதொட்டு இவ்வழக்கம் இல்லாதிருப்பின் கடவுளைப்பற்றிய தியானமே உலகத்தைவிட்டு ஓடிப்போயிருக்கும் என்பதுறுதி. நாம் வெளியேறிச்செல்லுங்காலத்தில் ஒரு நண்பர் வீட்டைக்கண்டவுடனும், அவர்பேசுந்தொனியைக் கேட்டவுடனும் அந்தச்சினேகிதரைப்பற்றிய நினைவு நமக்குவருகிறதன்றோ? அதுவரையில்லா நினைவு அப்போது வந்ததற்குக்காரணம் வீட்டுக்காட்சியும் வார்த்தையின் ஒலியுமல்லவா? இதுபோல் மாயையிற்சிக்குண்டு மயங்கிக்கிடந்த நம் அறிவிற்குக் கடவுளைப்பற்றிய அறிவும் பக்தியும் கொடுப்பது ஆலயமே என்பது பிரத்தியக்ஷப்பிரமாணம். ஆலயத்தில் மணியடித்த ஓசை கேட்டவுடன் பயபக்தி மேலிட்டு வணங்குவர் பல்லோர். இங்ஙனமே உற்சவாதிகளெல்லாம் ஆன்மஞானம் பிறவழியிற்சென்று மயங்குங்காலை அதனைத் திருப்பிக் கடவுளுணர்ச்சியிற் கூட்டக்கருதியே அமைக்கப்பெற்றனவாம்.

ஆனால் கடவுளைத்தானே வணங்கவேண்டும். ஆலயத்தை வணங்கும்படி கூறுவது எதன்பொருட்டு? என்னிற்கூறுதும்.

ஆலயம் என்னும் சொல் அதனுள்ளிருக்கும் கடவுளையுங்குறிக்கும். அன்றியும் ஆலயத்துட்சென்று கடவுளைத்தெரிசித்து வணங்குதல் எல்லாருக்கும் இயலாததுபற்றியும், திருமதில் கோபுரமாதிய ஆலய உறுப்புக்களை வணங்கும் வணக்கம் கடவுள் வணக்கமாகவே விதித்தமையானும் எல்லாருக்கும் பொருந்துமாறு ஆலயந்தொழுவது என்று கூறியவாறுகும். எந்தமதஸ்தர்களும் தங்கள் தங்கள் கடவுளை வணங்குவதற்கு ஓர் இடம் ஏற்படுத்தி அதனுட்சென்று நியதிப்படி வணங்கிவருதல் இன்றும் யாவரும் அறிந்ததொன்றே. இதனுலன்றே "மூர்த்திதலந் தீர்த்த முறையாய்த் தொழுபவர்க்கு வார்த்தை சொல்லச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" எனத் தாயுமானவர் கூறினர். சைவசமயாசாரிய சுவாமிகளும் "திருக்கோவிலில்லாத திருவிலூரும்" "கோலக்கோபுரக் கோகரணஞ்சூழாக் கால்களாற் பயனென்" எனத்திருவாய்மலர்ந்தருளினர். இப்படிப்பட்ட உதாரணங்கள் பலவுள. திருக்கோவில் கட்டுவித்துப் பேறுபெற்றுர் சரிதமும் பலவுள. ஆலய வணக்கத்தைப்பற்றிக் கோஷிக்காத புராணமுமுண்டோ ? இல்லை. இதை நோக்கும் மாணவர்கட்கு ஓர் சிறு கதைகூறுதும். இரண்டு சிநேகர்கள் ஒரு நாள் மாலையில் சந்தித்தனர். ஒருவன் கோயிலுக்குப்போக மற்றவனையழைத்தான், மற்றவனே அதைமறுத்து வேசிவீட்டுக்குப்போக அழைத்தான். முடிவில் அவரவர் எண்ணப்படியே ஒருவன் கோவிலுக்கும் மற்றவன் வேசிவீட்டுக்குமேகினர். கோவில்சென்றவன் காலில் கல்தட்டிச் சிறிது காயப்பட்டு மீண்டான். வேசியகஞ்சென்றவன் திரும்புப் போது ஒரு பொற்காசு கண்டெடுத்து மீண்டான். பின் இருவரும் சந்தித்துப் பேசுங்கால் பொற்காசெடுத்து வந்தவன் அக்காசைக் காட்டி "நண்பனே நான் வேசிவீடு சென்று பொற்காசு எடுத்து வந்தேன். நீகோவில்சென்று ரத்தக்காயப்பட்டு வந்தாய்" என்று கூறிக் கேலிசெய்தான். அவ்வேளை ஒரு பெரிய சோதிடர் வந்து இருவர் வாய்மொழியும் கேட்டு இருவர் ஜாதகமும் பார்த்துப் பலன் கூறினர். அதாவது கோவில் சென்றவனுக்கு அன்று நவக்கிரகப்பலன் படி உத்திரக்கல் தலையில் விழுந்து மண்டையுடைய வேண்டியதென்றும் அவன் நல்ல காரியத்தில் சென்றிருந்தானதலின் கடவுள் கருணையால் "தலை மட்டாக வந்தது முடிமட்டாக" என்றபடி அற்பக்

காயத்துடன் தீர்ந்தது எனவும், பொற்காசு எடுத்தவனுக்கு அவன் ஜாதகப்படி அன்று பெரிய ரத்தினப்புதையல் கிடைக்கவேண்டியதெனவும் அவன் தீய காரியத்தில் சென்று பாவஞ் செய்தானாகலின் அதற்குப்பதில் ஒரு சிறிய பொன்காசோடு அவன் அதிர்ஷ்டந் தீர்ந்ததெனவும் கூறினர். என்று நம்முதியோர்கள் நமது பாலப்பருவத்தில் புகலக் கேட்டிருக்கின்றோம். இது பொய்க்கதையாயினும் நன்மைதீமையின் பலாபலனைச்சிறுவர்க்கு விளக்குவதாகலின் இவண் குறிக்கப்பெற்றதாயிற்று. ஆலயத்துட்சென்று வரும்போதெல்லாம் அடியார் பழக்கம் எற்படலாலும் அந்த நேரம் முற்றும் சிந்தனை நல்வழியிற் பழகிப் பழகி முதிர்ச்சி பெற்றுப் பக்குவப்பட்டு முத்தியடைதற்கு ஏதுவாக முடிதலாலும் நன்று என்று மட்டுங்கூறாது 'சாலவு நன்று' என்று வற்புறுத்தியதாகும். இன்னும் ஆலய விஷயத்தை விரிவாகத் தெரியவேண்டுவோர் நமது விவேகபாநு 3-வது வால்யூம் 5-வது சஞ்சிகையில் தூத்துக்குடி சைவசித்தாந்த சபை உபாக்கிராசனாதிபதியவர்களாகிய ஸ்ரீமாந். பொ. மு. முத்தையபிள்ளையவர்களெழுதியவற்றால் நன்கு தெரியலாம்.

முருகவேள்.

மிஸ்டர் வி. கனகசபைபிள்ளையவர்கள்

B. A. B. L.

நம் தமிழ்ப் பாஷாபிமானிகளுக்கு இவரது பெயர் தெரியாமலிராது. இவர் தபால் இலாகா ஸூப்ரிண்டெண்டு வேலைபார்த்து வந்தவர். பி ஏ பி எல் என்ற உயர்ந்த பரீக்ஷைகள் கொடுத்தும் நம் நாட்டாரின் பலரைப்போல் வக்கீல் உத்தியோகத்துக்கும் முனிசிபு உத்தியோகத்துக்கும் செல்லாமல் தபாலிலாகாவிலேயே இருந்து நெடுநாள் காலங்கழித்து வந்தவர். தபாலிலாகா வேலைவிஷயம் யாவரும் அறிந்தவிஷயம். சாமான்யப்பட்டிக்காட்டானுக்கும் அது தெரியாமலிராது. மூச்சு விடவும் நேரமில்லாத அவ்விலாகாவில் இருந்துகொண்டு இவர் பழைய அபூர்வ தமிழ்க்கிரந்தங்களை ஏட்டுப்பிரதிகள் வைத்துக்கொண்டு ஆராய்ச்சி செய்து தமிழ்ப்பாஷையை அபிவிர்த்தி செய்து வந்தவரென்றால் பாஷா விஷயத்தில் இவருக்கு இருந்த அன்பையும் பற்றையும் சொல்லவேண்டுமோ? ஆங்கிலங்கற்றவர்கள் தமிழை ஆராய்ச்சி செய்வது மிகவும் துர்லபம். அவர்களிற்சிலர் பரீக்ஷாதிகாரிகளாகும் வண்ணம் தமிழை அபிவிர்த்தி பண்ணுவது வழக்கம். இவரோ பாஷையின் அபிமானத்தை முன்னிட்டு அப்பாஷையின்கண் உழைப்பது வழக்கம்: அச்சிலருள் நம் பிள்ளையவர்கள் முதன்மை பெற்றவரெனலாம். பாஷா ஆராய்ச்சி செய்வதிலும் தற்காலத்திற்கேற்ப விஷயங்களைச்சில சாஸனங்கள் மூலமாகவும் சரித்திர பூர்வமாகவும் அறிந்து பூர்வகிரந்தங்களின் அருமையான விஷயங்களை ஆங்கிலத்தில் ஒருபுத்தகரூபமாக வெளியிட்டனர். அறிவுக்குத்தக்க குணமும் இவரிடம் வாய்ந்திருந்தது மிகவும் பாராட்டற்பாலது. நாம் இக்குணவானை நேரில் அறிவோம். இவரது அடக்கமும் அன்பும் பாஷாபிமானமும் பொறுமையும் தயையும் சிநேக வாஞ்சையும் பழகியவர்கள் எவர்க்கும் நன்கு புலப்படாமலிரா. மதுரை தமிழ்ச்சங்கத்தின் [illegible]-ம் வருஷோற்சவகாலத்தில் அக்கிராசனம் வகித்து தமிழ்ப்பாஷையின் பெருமையைப்பற்றிப் பேசினர். இக்குணவான் இம்மாதம்21-உ புதன்கிழமை இரவு காஞ்சிமாநகரத்தில் திடீரென்று பரலோகப்பிராப்தியானார் என்பதைக்கேட்டு திடுக்கிட்டுத் தீராத்துயரடைந்தோம். இவர் பெருங்குடும்பஸ்தர். இவரது மனைவிமக்களுக்கும் உற்றார் பெற்றார்களுக்கும் சிநேகிதர்களுக்கும் இவரது அகால மரண சம்பவத்தைக்குறித்து நமக்கிருக்கும் துக்கத்தை இப்பத்திரிகை வாயிலாய் வெளியிட்டிருக்கிறோம். இவரைப்போல் தமிழ்ப்பாஷைக்குழைத்தவர்கள் இலரென்றே கூறலாம்.

பத்திராதிபர்.

இரஷியவதைப்பரணி.

காப்பு.

தேவேந் திரனேபோற் றேயங் கிழக்குடைய
கோவேந்தன் * போர்ப்பரணி கூறவே—பூவேந்தும்
நான்முகனுஞ் சங்கரனும் நாரணனு மாமொருவன்
கான்மலரே யாமுடைய காப்பு. (௧)

அவையடக்கம்.

செயங்கொண்டான் செப்பிய தெய்வப் பரணி
நயங்கொண்ட நல்லறிஞர் முன்னே—அயங்கொண்ட
வன்கவிகள் பாடி மகிழ்ந்தேம் இதுவன்றோ
புன்கவிகள் போக்கும் பொழுது. (௨)

நூல்செய்தற்குக் காரணம்.

கண்டமொன்றில் வாழ்கின்ற காரணமும் †நம்பெரியோன்
உண்டுபண்ணும் நல்லறமே ஓம்புதலும்—அண்டுநமக்
கெப்பதனில் வைப்பாரும் ஏற்றமும் ‡யப்பானுக்கு
இப்பரணி செப்பற் கியைபு. (௩)

---

* ஜப்பான் சக்கரவர்த்தி.

† புத்தர்.

‡ ஜப்பான்.

நூல்.

க-வது கடவுள் வாழ்த்து.

திருமால்.

திருவந்த பாற்கடலி னடுவொரு
நீலமலை சேர்ந்த தேபோற்
கருவந்த திருவுருவோ டரவணையிற்
றுயிலிறையைக் கருதி வாழ்வாம். (க)

அன்னவன்போ லவதரித்திவ் வகன்ஞாலங்
தகநிறுவ ஆழி தாங்கும்
மன்னவர்மன் னவன்கிழைத் திக்காளும்
* மிக்காடன் வாழ்க என்றே. (உ)

சித்தார்த்தர் (புத்தர்)

உயிர்த்தொகைக ளுணர்வென்னு முள்ளீ டின்றி
உழன்றுதிரி இருட்காலை உதயத்துச்சி
செயிர்த்தெழுந்த இளங்கதிர் போற் கதலை †மேய
சித்தார்த்த மூர்த்திதனைச் சிந்தை செய்வாம். (ங)

அப்பகவன் தனதறத்தை அழியா தோம்பி
அவனியின்கிழ்த் திசைத்திப மாகி நின்ற
ஒப்பரிய ஜப்பானு டாள்வோன் சீர்த்தி
உலகமெலாம் ஒருங்குகவித் தோங்க என்றே. (ச)

---

* மிக்காடோ சக்கரவர்த்தி.

† ஆரியாவர்த்தத்துள்ளது.

பிக்ஷுக்கள்.

குணக்குன்றி னின்றுலகைக்
குளிர்விக்கும் அருள்பூண்டே
உணக்குந்தம் புலனைந்தும்
ஒடுக்கியவர் அடிக்கழல்கள். (௫)

கணக்கின்றி வஞ்சனையே
கற்றஅடல் இரஷியராம்
பிணக்குன்றில் நின்றுபொரும்
பெருமானைப் புரக்குகவே. (௬)

* சூரியன்

ஆரிருளை அறநீக்கி
அவனியின்கீழ்த் தனித்தீவின்
பேரிறைவர் குலமுதலாய்ப்
பிறங்குகதிர் தனைப்பணிவாம். (௭)

காரிருளே போற்பகையைக்
களைந்தஅவர் வழிநிற்கும்
தாருடைய மிக்காடன்
தனியாணை வாழ்கவென்றே. (௮)

† பிதுர்க்கள்.

எதிரிகளை இல்லாதே இருங்கடல்சூழ்
ஜப்பானை இனிதி னாண்டு
பிதிரர்களாய் விண்ணின்ற பெருமக்கள்
திருவருளும் பெருகு மாலோ. (௯)

அத்தகையோர் வழிவந்த அருமணியாய்
உலகாள அவத ரித்த
மெத்துபுக ழுடையபிரான் மிக்காடன்
நீடூழி மேவ என்றே. (௧௦)

---

* ஜப்பான் சக்ரவர்த்திகள் சூரியனையே ஆதி பிதாவாக வுடையோர் என்பது ஜப்பானியர் கொள்கை.

† பிதிர்க்களை வணங்குதல் ஜப்பானியரது தொன்றுதொட்டவழக்கம்.

* மழைக்கடவுள்.

அறந்தங்கும் நாடெல்லாம்
அன்னைபோல் இனிதருத்தி
வறந்தங்கா வளஞ்செய்யும்
மழையிறையை வணங்குதுமே. (கக)

மறந்தங்கு கொடுங்கோன்மை
மாற்றித்தன் னருள்பொழியும்
திறந்தங்கு மிக்காடன்
திருநாடு செழிக்கவென்றே. (கஉ)

† கடற்கடவுள்.

அடற்குரிய அலையடக்கி
அவனிமுழு துந்தழுவுங்
கடற்கடவு ளெவனவனைக்
‡ கைதட்டிப் பரவுதுமே. (கங)

குடக்குவரும் இரஷியர்கள்
கொண்டபெருஞ் செருக்கெல்லாம்
மடக்கவருங் $ குணதீப
மகிபாலன் வாழ்கவென்றே. (கச)

பொது.

உலகுயிர் முழுவது மொன்றி வாழுமே
உயர்தரு பொருளற மின்ப மோங்குமே
அலகில கலையொடும் அமைதி யாகுமே
அடன்மிகு குணதிசை அதிபன் ஆளவே. (கரு)

---

* இக்கடவுளரும் அவரால் வணங்கப்படுவோரோ.

† இரஷ்யரது ஆட்சி.

‡ கைதட்டுதல் ஜப்பானியரது தெய்வங்தொழும் முறை.

$ கிழக்கு விளக்கு.

உ-வது *கடைதிறப்பு.

மழலையின் மிகுதரு மின்மொழி
மழையினை வெளிறுசெ யுங்குழல்
அழகினி லிணையறு மொண்முக
அமுதனை யவர்கடை திறமினோ. (க)

குணதிசை உயர்தரல் கருதியே
† குடவர்த முடனமர் புரிதருங்
கணவர்கள் சயமுறு செயலையே
கனவுவீர் நுமகடை திறமினோ. (உ)

நாயகர் அமர்பொர அகறலின்
நலிவுறு சிறுதுயர் வலிபெறுந்
தேய்ம துயர்நலம் நினைவுழிச்
சிதையவே துயில்பவர் திறமினோ. (௩)

வேறு.

அன்போ டெம்மை மடநல்லார்
அழைத்து வாயில் நிற்கின்றார்
மின்போல் மடவீர் உறங்குதிரோ
மிளிர்பொற் கபாடந் திறமினோ. (௪)

நாட்டின் பொருட்டு நங்கொழுநர்
நயந்த போரில் இரஷியர்தங்
கோட்டை யிடித்து முழங்கினரோ
குளிர்பொற் கபாடந் திறமினோ. (௫)

---

* மஞ்சூரியாவில் இரஷியருடன் அமர்புரியும் தம் கணவர் அடையும் பெருவெற்றிகளைக் கேட்டுத் தேசியோவில் உள்ள அவர் மனைவியர் இரவில் எழுந்து, தம்மைப்போலக் கணவரைப்பிரிந்த மாதர்களுக்குச் சொல்லி மகிழவேண்டி, அவர்கள் வீட்டுவாசல்களினின்று துயிலெழுப்புகின்றனர்.

† இரஷியர்.

திருந்தப் பின்னுங் குழன்மடவீர்
சேர்ந்த வீரர் சேராரை
வருந்தப் பொருத பெருவெற்றி
வந்து கேட்பத் திறமினோ. (௬)

வீரக் கொழுநர் வென்றபுகழ்
விண்ணும் மண்ணும் பரவுதலைப்
பாரக் குழலீர் காணிரோ
பைம்பொற் கபாடந் திறமினோ. (௭)

வேறு.

அருமை யுடைக்கணவர் அமரினி கழ்த்துசெயல்
அறியும்வி ருப்பமுட னலைதலி னெய்த்திரவிற்
கருமயி லிற்றுயில்வீர் கனமுறு வெற்றியிவை
கடுகவி ழித்தருளிக் கடைதிறமின் திறமின் (௮)

வேறு.

* தோகை நகரம் விசயமொடு
துவச மெழுப்ப வீதிதொறும்
ஓகை யெழுந்து குதிகொண்ட
தும்பொற் கபாடந் திறமினோ. (௯)

வெற்றிச் சின்ன முழங்குவதும்
வெடித்த † பெருங்குண் டிடித்ததுவும்
கற்றைக் குழலீர் கேளீரோ
கனகக் கதவந் திறமினோ. (௧௦)

வேறு.

அமரி னுபகரை யகல வேயருளி
அமலி மேவிநனி துயி லுமிக்
குமரி நாயகியர் செயல்க ளோகொடிய
கொடியனீர் கடைகள் திறமினோ. (௧௧)

---

* டோகியோ: இது ஜப்பான் தலைநகர்

† பீரங்கி.

கனவின் முன்னமெதிர் கணவன் மெய்பிலுறு
    கடிய குண்டுருவு புண்டனைத்
தனமெ னுந்தமது வேதி னெற்றிமகிழ்
    தருநலீர் கடைகள் திறமினோ. (கஉ)

வேறு.

களமுறு மணமகன் படைகொடு
    கனவிடை வருதலுங் கடுகடுத்
திளகிய அரிகையில் *அசினதற்
    கெனவெகுள் பவர்கடை திறமினோ. (கங)

வேறு.

மைக்கா ரன்ன தண்ணளியான்
    மன்னர் மன்னன் மகிதலமாள்
மிக்கா டனையாம் வாழ்த்து தற்து
    விரைந்து கபாடந் திறமினோ. (கச)

வேறு.

கூந்த லவிழக் குறுங்கண் முகிழ்ப்பக்
    குலைந்த துகிலோ டெழுந்திருந்து
காந்த னொருங்கு பகையைக் களைந்த
    களப்போர் பாடத் திறமினோ. (கரு)

வேறு.

பிறந்த அகத்து மகிழ்ந்துறையும்†
    பேதை மீர்நுங் கணவர்புகழ்
மறந்து துயிலு கின்றீர்காண்
    வாயிற் கபாடந் திறமினோ. (கசா)

---

* வாள்.

† ஜப்பான் மங்கையர்பிறந்த வீட்டிலேயே வசிப்பது வழக்கம்; கணவர் ஒவ்வொரு நாளும் அவரை வந்து கண்டுபோகவேண்டும். புதிய வீடுகட்டினால் கணவருடன் வசிக்கலாம்.

வேறு.

அலர்முற்றவும் அணிமற்றவும்
    அழகிற்றரு குழலீர்
நலமுற்றிய கடல்வெற்றியும்
    நணுகுற்றது திறமின். (கஎ)

கடருவிய கணவன்பொரு
    கடல்வெற்றியும் நாளை
விடலால்வரு கடிதஞ்சொலும்
    விரைவிற்கடை திறமின். (கஅ)

தலமேவிய பலமாநகர்
    தனியேநகர் வனபோல்
அலைமேவிய அடையார்கலம்
    அழிவுற்றன திறமின். (ககூ)

வேறு.

விரர் குதித்தனர் விழிமினோ
    வீதி களிப்பன எழுமினோ
ஊரின் எழுச்சியை உணரவே
    ஓடி முகக்கடை திறமினோ. (உ௰)

[இன்னும் வரும்]

ஒரு பண்டிதர்.

சமாசாரக்கொத்து.

பம்பாய் நகரத்தில் 42,954 கட்டடங்கள் இருப்பதாக முனிசிபாலிட்டியார் கணக்கிட்டிருக்கிறார்கள்.

* * * *

பேச்சுத்தொனி ஆகாயத்தின் அமைப்புக்கும் தெளிவுக்கும் ஏற்றவாறு வியாபிக்கிறது. உத்தர சமுத்திரங்களில் இரண்டு மைலுக்கு அப்பாலுள்ள ஒருவனோடு தாராளமாகச் சம்பாஷிக்கலாம்.

* * * *

உலகத்தில் ஓர் உயர்ந்த பாலம்:—இதுவரை பிரிடிஷ் என்ஜினியர்களால் கட்டப்பட்ட வாராவதிகளில் ஜாம்பஸ் நதியின்மேல் கட்டப்பட்டிருக்கும் பாலம் உலகத்தில் உயர்ந்தது. இப்பாலம் நீர்மட்டத்திற்குமேல் 400 அடி உயரமுள்ளது.

* * * *

எரு விதைப்பதற்கு முன் நிலங்களுக்கு அமெரிக்கர் பருத்திவிதை, புண்ணாக்கு, நெல் குத்தும் யந்திரத்தில் விழும் உமி, வைக்கோல், தாள் முதலிய குப்பைகள் இவைகளை எருவாக உபயோகிக்கிறார்கள். நம் நாட்டிலும் இதனைப் பரீக்ஷை செய்துபார்க்கலாம்.

* * * *

சென்னையிலுள்ள ஸென்டரல் கமிட்டியாரிடமிருந்து 50 ராத்தல் 'காரவானிகா" என்ற பருத்திவிதை வாங்கி பரீக்ஷார்த்தமாகப் பயிர்செய்யும்படி மதுரையிலுள்ள கிருஷிகர்களுக்கு இனமாய்க் கொடுக்கவேண்டுமென்று மதுரைக் கிருஷி சங்கத்தார் தீர்மானித்திருக்கிறார்கள்.

* * * *

நமது எட்வர்டு அரசருக்குப் பிரதி தினமும் 1000 கடிதங்களும் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட சமாசாரபத்திரிகைகளும் வருகின்றனவாம். ருஷீய சக்கிரவர்த்திக்கு 650கடிதங்களும் இத்தாலி ராஜாவுக்கு 500கடிதங்களும் ஹாலெண்ட் மகாராணிக்குச் சுமார் 150கடிதங்களும் பிரதிதினம் வருகின்றனவாம்.

* * * *

தந்தி இதுவரை செய்துவந்ததுபோல் சமாசாரங்களை மாத்திரம் தெரிவிப்பதுமன்றி அவ்யந்திரமே அது தெரியப்படுத்தும் விஷயத்தை டைப் எழுத்தில் எழுதிவிடும்படியானதோர் யந்திரம் தற்காலம் கண்டுபிடிக்கப்

பட்டிருக்கிறதாம். இவ்யந்திரம் கண்டுபிடித்தவர் போடாட் என்பர் ஆகை யால் இவ்யந்திரத்துக்கு போடாட்டைப் எழுத்தெழுதும் தந்தியந்திரங்கள் என்று பெயர் வழங்குகிறது.

*   *   *   *

தற்காலம் இந்தியாவில் 15 லக்ஷம் ஏகரா பூமியிலே புகையிலை பயிர் செய்யப்பட்டு வருகிறது. பிரதி வருஷம் சென்னை இராஜதானியிலிருந்து சுமார் 33 லக்ஷம் ரூ பெறுமான புகையிலை அந்நிய நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுவருகிறது. இதில் மூன்றில் இரண்டுபாகம் புகையிலையாகவும் மூன்றில் ஒரு பாகம் சுருட்டாகவும் அனுப்பப்படுகிறது. இவ்விராஜதானியில் மட்டும் 119,000 ஏகரா நிலத்தில் புகையிலை பயிரிடப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

*   *   *   *

காசி சென்ட்ரல் ஹிந்து காலேஜில் ஒரு சம்ஸ்கிருத புஸ்தகசாலை ஸ்தாபிக்கப் பிரயத்தனம் நடந்துவருகின்றது. இதுவரை இப்புத்தக சாலைக்கு ஒரு லக்ஷ ரூபாவுக்கு சேர்ந்திருக்கிறது. காசி மகாராஜா ஷை தொகையில் ரூ 30,000 நன்கொடையளித்திருக்கிறார். இப்புத்தகசாலையின் கட்டடத்திற்கு மகாதர்மசீலரான ஆனரபில் முன்ஷி மாதேலால் என்னும் புண்ணிய புருஷர் ரூ 25,000 நன்கொடையளித்திருக்கிறார் என்று கேள்வியுற்று ஆனந்தமடைந்தோம்.

*   *   *   *

நெற்பயிரானது முதல் இந்தியாவிலிருந்து மடகாச்சருக்கும் அங்கிருந்து 17 வது நூற்றாண்டில் அமெரிக்காவுக்கும் கொண்டுபோகப்பட்டுப்பயிர் செய்ய ஆரம்பித்ததாக சைதாப்பேட்டை காலேஜ் தலைமை உபாத்தியாயராக இருந்த மிஸ்டர் ஆர். ராபர்ட்ஸன் என்பவர் ஒரு உபந்நியாசத்தில் வெளியிட்டிருக்கிறார். சென்னை இராஜதானியின் ரயத்வாரிக் கிராமங்களில் சுமார் 53 லட்சம் ஏகராவுக்குமேல் நெல்பயிர் செய்யப்படுகின்றது. இதர கிராமங்களில் 97, 700 ஏகராக்கள் நெல் சாகுபடியாகின்றனவாம்.

*   *   *   *

தபால் முத்திரைகள் சேர்த்தல்:— நமது இளவரசர் மைசூருக்குச் சென்றபோது மைசூர் ஜியலாஜிகல் இலாகாவைச்சேர்ந்த மிஸ்டர் E. W. விதெரெல் தாம் சேகரித்து வைத்திருந்த தபால் முத்திரைகளை அவருக்கு காண்பித்தார். 64000 முத்திரைகள் சேகரித்து வைத்திருந்தார். இந்தச் சேர்மானத்தில் இந்தியா, மொரிஷஸ், கேப் ஆப் குட்ஹோப், லாகாஸ், நியூ சௌத்வேல்ஸ், சிலோன், பிரின்ஸ் எட்வார்ட் ஐலண்ட், நியூஸீலண்

டு, நோவாஸ்கோஷியா, நியூப்ரன்ஸ்விக், சென்ட்ஹெலினா, ஆன்டிகா: டாஸ்மேனியா, மான்ட்சிர்ராட், மலே, கன்வென்ஷன் ஸ்டேட் முதலிய தேசசங்களின் முத்திரைகளிருந்தன. பூர்வீகமான பழைய முத்திரைகளை விலை கொடுத்தும் வாங்கிச்சேர்ப்பதுண்டு. நமது இளவரசரே மொரிஷஸ் ஸ்டாம்பு ஒன்று 1450 பவுண்டு கொடுத்து வாங்கியிருக்கிறார். மிஸ்டர் விதெரெல் நோவாஸ்கோஷியா ஸ்டாம்புகளுக்கு 250 பவுணும், மலே, கன்வென்ஷன் ஸ்டாம்புகள் ஒவ்வொன்றுக்கு 15 பவுண் முதல் 50பவுண் வரை கொடுத்து வாங்கியிருக்கிறார். நமது இளவரசர் லண்டன் பைலாடெலிக் ஸொஸைட்டி பிரசிடெண்டு ஆகையாலும் தாமே முத்திரைகள் சேர்ப்பவர் ஆகையாலும் மிஸ்டர் விதெர முத்திரைகளைச் சுமார் ஒரு மணிநேரத்துக்கு மேலாகவே பார்வையிட்டு அதிக சந்தோஷப்பட்டு அவரை மெய்ச்சிக்கொண்டனர். **சுதேசாபிமானி.**

பத்திராதிபர்.

புத்தகக்குறிப்பு.

—:o:—

சூதவனபுராணம்: இதுசோழநாட்டின் காவிரியாற்றின் தென்கரையில் பாடல்பெற்ற ஸ்தலங்களிலொன்றாகிய திருவுசாத்தானமென்னும் சூதவன க்ஷேத்திரத்தின் விசேடங்களைக்கூறும் 1520-பாடல்களும் வசனமும் கொண்டது. இதனை இயற்றியவர் காரைக்குடி நகரத்தாருள் சைவாபிமானமும் வைதிக ஒழுக்கமும் தமிழ் நூலாய்ச்சித் தெளிவும் கவிபாடுந்திறனும் உபகாரசீலமும் பொருந்திய ஸ்ரீமத் கு. ராம. சொக்கலிங்கச்செட்டியாரவர்களே. இவர் இதற்கு முன்னரும் திருப்புத்தூர் தலபுராணமாதிய பல நூல்களை இயற்றியவர். இவர் வாக்கு மிகவும் மதுரமானது. இந்நூலை ஆக்குவித்தோர் ஆலங்காடு வைசியவேளாள குலத்துக்கண்ணிய புருஷரும் சிவபத்தியிற் சிறந்த புண்ணிய சீலரும் ஆகிய ஸ்ரீமாந் ராம. சித.-சிதம்பரஞ்செட்டியாரவர்களே. இந்நூல் மதுரைத் தமிழ்ச்சங்கம் முத்திராசாலையில் பதிப்பிடப்பெற்றது. இந்நூலை எமக்கனுப்பிய இவ்விருவருக்கும் நன்றி கூறுகின்றாம்.

கரும்பு:— நம் சிறுவர் முதல் பெரியர்வரை யாவரும் அறிந்துள்ள விளைபொருள் கரும்பு. ஆனால் அதன் மற்றவிஷயங்களைப் பலர் அறியார். நிலமும் நீரும் காலமும் வேறுபாடுகொண்டிருப்பதற்கேற்ப அவற்றின் அளவறிந்து பயிரிடவேண்டிய இக்கரும்பைப் பற்றி இதுவரை ஒரு தனி நூல் வெளிப்படக் காண்கிலம். இப்போது விவசாயத்தில் அல்லும் பகலும் இடைவிடாது ஊக்கத்துடன் உழைத்து வரும் மகா-௱-௱-ஸ்ரீ ஜி. ராஜகோபாலநாயுடு அவர்கள் இத்தலைப் பெயர் கொண்ட நூல் ஒன்றைவெளியிட்டிருப்பதறிந்து மகிழ்கின்றோம் இவர் விவசாய விஷயத்தில் தாம் உழைப்பதற்குக் காரண புருஷராயிருந்த டப்ள்யூ. ஆர்: ராபர்ட்டுஸன், எஸ்குயர் எம். ஆர். ஏ. ஸி. அவர்கட்கு இந்நூலை உரிமையாக்கிய அன்பின் பெருக்கம் வியக்கற்பாலது. ஷெ துரையவர்களின் அழகிய படம் ஒன்றும் இந்நூன் முகப்பிலுள்ளது. இந்நூலுள் கரும்பின் ஜாதி வேறுபாடுகள், அவற்றின் தன்மைகள், கரும்பைப் பயிரிடும் முறை, பலனையுபயோகிக்கும் முறை, சர்க்கரை ஆக்கும் ஆலையின் தன்மைகள் முதலிய பல விஷயங்கள் நன்கு கூறப்பெற்றுள்ளன. கரும்பு முளைத்தல் ஆலையடிப்பு முதலிய பல படங்களும் ஆங்காங்கு காட்டியிருத்தல் குடித்தனக்காரர்கட்குப் பெரிதும் பயன்தருவனவே. இதன் சொற்றொடர் அக்கரும்பினு மினிதாக அமைந்துளது. இன்னும் இடைப்பிறவரலாக இன்றியமையாத இடங்களிலெல்லாம் அயல்நாட்டார் பலர் சர்க்கரை செய்யும் மார்க்கங்களையும் கூறுகின்றார். விளைபொருள்களுள் நெல்லுக்கு அடுத்தபடியாகிய கரும்பைப்பற்றி இதுவரையில் யாமறியாத பல விஷயங்களை இந்நூலால் அறியலாம். டெம்மி 8 பக்க அளவில 92 பக்கங்கொண்டுள்ள இந்நூலின் விலை ரூ 1—4—0 இதனை நமது பார்வைக்கனுப்பியதற்காக இந்நூலாசிரியருக்கு நன்றி கூறுகின்றோம்.

பத்திராதிபர்.